# I. இதழியல்

## 1. இதழியல் விளக்கம்:

செய்திகளைச் சேகரித்தலும், சேகரித்த செய்திகளைப் பத்திரிகை வாயிலாகப் பரப்புதலும் இதழியல் எனப்படும். "Journalism means gathering and dissiminating the News" ஜெர்னலிசம் என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் இதழியல்.

இச்சொல் "டையர்னல்" என்ற பழைய இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. 'சர்னல் / டையர்னல்' என்றால் அன்றாடம் நடந்ததை எழுதி வைப்பது என்பது பொருள். 'தற்போது சர்னல் என்ற சொல் இதழ்களையே குறிக்கிறது என்கிறார் அ.மா. சாமி.

பத்திரிகையின் பேராற்றலைப் பாரதிதாசனார்:

"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடை துயில்வோர் கண்ணில்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த
பத்திரிகைப் பெண்ணே!"

என்கிறார்.

## இலக்கணம்:

பத்திரிகைகளுக்கு, குறிப்பாகச் செய்தித்தாள்களுக்கு எழுதுவதுதான் இதழியல். இதழியல் அறம், சட்டத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்பார்-இராமச்சந்திரன்.

வெளியிடுவதற்காக நடைமுறையில் உள்ள மாறுபட்ட விவரங்களைக் கொடுப்பதும், எழுதுவதும், செப்பனிடுவதும் இதழியல் என்கிறது - வெப்ஸ்டர் அகராதி.

பத்திரிகைகளுக்கு எழுதுதல், நடத்துதல் இதழியல் என்கிறது - சேம்பரின் 20-ஆம் நூற்றாண்டு அகராதி.

பொதுவாகப் பொது நோக்கு உடையது பத்திரிகைத்துறை. ஆற்றல் மிக்க கருவி. மனித நலனுக்காகப் பாடுபடுவது இதழியல் என்கிறார் அமெரிக்கப் பத்திரிகை ஆசிரியர் - ஹரால்டு பெஞ்சமின்

பொதுச்செய்தி, கருத்துக்கள், பொழுதுபோக்கு அம்சங்களை மக்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் பரப்புவது இதழியல் என்கிறார் - ஜி.எப் மோட்.

பத்திரிகைதான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகப்பெரிய காவலாளி என்கிறார் - லார்டுகிரே.

அவசரத்தில் பிறக்கும் இலக்கியம் இதழியல் என புகழ்கிறார் - மேத்யூ ஆர்னால்டு

பெரும்பாலும் ஒரு பத்திரிகை அறிவிப்பதும் கருதுவதும் வரலாற்று மதிப்புடையதாக உள்ளது என்கிறார் - பிராங் மோசஸ்

1828 அரசியல் நிர்ணய வரலாறு பற்றி ஒரு கட்டுரை எழுதிய வரலாற்று ஆசிரியர் 'மெக்காலே' இதழியல் துறையை அரசின் நான்காம் தூண்' (**Fourth estate**) என்று வருணித்துள்ளார். இவ்வாறு ஒவ்வொருவரும் பத்திரிகைகள் குறித்து பலவாறு விளக்கம் தருவர்.

தாமஸ் ஜெபர்சனிடம் ஒரு முறை "நீங்கள் செய்தித்தாள்களே இல்லாத அரசை விரும்புவீர்களா? அல்லது அரசே இல்லாத செய்தித்தாள்களை விரும்புவீர்களா?" எனக் கேட்டதற்கு 'அரசே இல்லாத செய்தித்தாள்களையே விரும்புவேன்' எனப் பதில் தந்தார். இதிலிருந்து அவர் பத்திரிகைக்குத் தந்த சிறப்பினை அறியலாம்.

பத்திரிகை பொதுமக்களின் கருத்துக்களை உருவாக்கவோ அழிக்கவோ வல்லதாக இருக்கிறது. பத்திரிகைகள் உண்மையுடனும் பொறுப்புடனும் செயல்படாவிட்டால் அதனால் தீமையே ஏற்படும். இந்தக் கருத்தை வைத்துத்தான் பின்வருமாறு கூறுகிறார் தோரோ.

"செய்தித்தாள்களை எப்பொழுதுமே படிக்காதவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் அவர்கள் இயற்கையை அதன் மூலம் இறைவனையும் காண்பார்கள் என்கிறார்".

செய்திகளைப் பெறுவதும், பிறருக்குத் தருவதும் ஆகிய கலையே இதழியல் (**The art of collection and dissemination of current news and events**) எனப்படும் என்பார் கி. இராசா.

## நான்காம் தூண்

பத்திரிகைகள் ஜனநாயகத்தின் காவலன் எனப் போற்றப்படுகின்றன. மக்களாட்சியின் நான்காவது தூண் எனவும் சுட்டப்படுகிறது. முதல் தூணாக குடியரசுத்தலைவரும் இரண்டாம் தூணாக பாராளுமன்றம் சட்டமன்றமும் மூன்றாம் தூணாக நீதித்துறையும் (நீதிமன்றம்) நான்காம் தூணாகப் பத்திரிகைகளும் குறிக்கப்படுகின்றன. இந்த நான்கு தூண்களும் மக்களாட்சி என்ற கட்டிடத்தைத் தாங்கி நிற்பதாக உருவகப்படுத்தியுள்ளனர்.

## 2. மக்கள் தொடர்புச் சாதனங்கள்:

### தொலைக்காட்சி:

மனிதன் கிணற்றுத் தவளையாக வாழ நினைக்கக்கூடாது. அவன் பரந்த அறிவு பெற்ற மனிதனாக வாழவேண்டும். மனிதன் மனிதனாக மதிக்கப்படுவதற்கு அவனது அறிவுத்திறனே காரணமாகிறது. மனிதனுக்குத் தகவல் துறையே அறிவை வழங்குகின்றது. தகவல் துறையில் தொலைக்காட்சியே இன்று சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது.

### டெலிவிஷன் பெயர் தோன்றிய முறை:

தமிழில் ‘தொலைக்காட்சி’ என்பதை ஆங்கிலத்தில் ‘டெலிவிஷன்’ என அழைக்கின்றோம். டெலிவிஷன் என்ற கருவி தோன்றுவதற்கு முன்பே ‘டெலிவிஷன்’ என்ற சொல் தோன்றிவிட்டது. 1892ஆம் ஆண்டு ‘மாக்ஸ் பிளெஸ்னர்’ என்ற பத்திரிகையாளர் ‘டெலக்ராஸ் கோப்’ என்ற பொருளில் ஒரு கட்டுரை எழுதினார். அக்கருவியில் நாடகங்கள், நாடாளுமன்ற நடவடிக்கைகள், சொற்பொழிவுகள், மாதாகோவில் வழிபாடுகள், பந்தயங்கள், பேரணிகள், தலைவர்கள் மக்களுக்கு நிகழ்த்தும் உரை ஆகிய காட்டப்படும் என்று அறிவித்திருந்தார். ஆனால் எப்படிக் காட்டப்படும் என்று அவர் எழுதவில்லை. 1990ஆம் ஆண்டு பிரெஞ்சு நூலகர் ஒருவர் ‘மின்சார அஞ்சல்முறையில் படங்களைத் தரும்கருவி’ என்ற வகையில் ஒரு கருவிக்கு பெயர் வைக்க முனைந்தார். டெலஸ்கோப், எலக்டிரிகல் டெலஸ்கோப், டெலராக்ஸ்கோப் எனப் பல பெயர்கள் அப்போது இருந்தன. அந்நூலகர் அப்பெயர்களை விட்டுவிட்டு, ‘டெலிவிஷன்’ எனப் பெயர் சூட்டினார். அப்பெயரே நிலைபெற்றது. இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிச் சொற்களின் அடிப்படையில் டெலிவிஷன் என்ற சொல் உருவாயிற்று. ‘மின்சார முறையில் ஓரிடத்தில் இருந்து, வேறோர் இடத்திற்கு அஞ்சல் செய்வது’ என்பதே டெலிவிஷன் என்ற சொல்லின் பொருளாகும். டெலிவிஷன் என்பது பின்னர்த் தமிழில் தொலைக்காட்சி ஆயிற்று.

### தொலைக்காட்சியின் தோற்றம்:

1925-இல் ஜான்லகி பெயர்டு என்பவர் தொலைக்காட்சிக் கருவியைக் கண்டு பிடிப்பதில் ஆர்வம் காட்டினார். பெயர்

மட்டும் தோன்றி அதற்குரிய கருவி இல்லாத நிலையில் ஸ்காட்லாந்து நாட்டவரான அவ்விஞ்ஞானி மிகவும் முயன்று, 1926ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் நாள் தாம் கண்டு பிடித்த கருவியை இயக்கிக் காட்டினார். அவர் சில அடி தூரத்தில் இருந்த சிலுவை ஒன்றின் நிழலைத் திரையில் அஞ்சல் செய்து விட்டார். நாற்பதுக்கும் மேலான விஞ்ஞானிகள் அப்புதுமையைக் கண்டு மகிழ்ந்தனர். அதன் பின்னர் மேலும் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. 1928-இல் பிரிட்டிஷ் வானொலி சோதனை முறையில் தொலைக்காட்சியை இயக்கியது. மேலும் பத்தாண்டுகளுக்குப் பின்னரே வணிக முறையில் தொலைக்காட்சி தொடங்கியது.

## தொலைக்காட்சி - பலவகை நோக்கு:

தொலைக்காட்சியைப் பலவற்றின் தொகுதி எனலாம். 1) ஒளியையும் ஒலியையும் ஈர்க்கும் காமிரா, மைக் 2) ஒளி, ஒலியைச் சீராக இயக்க ஒரு கட்டுப்பாட்டு அமைப்பு 3) அஞ்சல் செய்வதற்கு வசதி உண்டாகும் திட்டம் 4) நிகழ்ச்சியைக் காண ஒரு தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றின் தொகுதியே தொலைக்காட்சியாகும். மனோதத்துவ முறையில் ஒரு நிகழ்ச்சியை ஒரே சமயத்தில் ஒருவர் ஓர் இடத்தில் இருந்து (நிகழ்ச்சி நடக்கும் நிலையம், வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி) பார்ப்பது போன்ற உணர்வைப் பெறுவார். இது வரலாற்று முறையில் இப்புதிய யுகத்தின் குறிப்பிடத்தக்க ஒப்பற்ற தனிக்கண்டுபிடிப்பாகும். சமுதாய நோக்கில் கல்வி, விளம்பரம், பிற செய்திகளைத் தெரிவித்தல் ஆகிய வகைகளில் தொலைக்காட்சி பயன்படுகிறது. பொருளாதார நோக்கில் பார்த்தால் அது பலருக்கு வேலை வாய்ப்பைத் தருகின்றது.

## இயங்கும் முறை:

தொலைக்காட்சி என்பது ஓர் (எலக்ட்ரானிக) மின்னணு இயக்கம். எலக்ட்ரானிக் ஆற்றலால்தான் தொலை தூரத்தில் நடைபெறும் காட்சியைக் காண முடிகின்றது. எலக்ட்ரான்களை வெளியிடும் கருவிகள் எலக்ட்ரானிக் கருவிகள். எலக்ட்ரான்கள் சாதாரணக் கண்களால் காண முடியாத அளவு நுண்ணியவை. ஒரு கூட்டத்தில் பேசும் போது, 'மைக்' ஒலியை வாங்கி மின்சார சமிக்ஞையாக மாற்றுகிறது. அதனைப் பெருக்கி (ஆம்ப்ளிபயர்) பெரிதுபடுத்துகிறது. அவ்வாறு பெரிதுபடுத்தப்பட்ட

மின்சமிக்ஞையை ஒலிபெருக்கிக் குழாய் மீண்டும் ஒலியாக மாற்றி விடுகின்றது. தொலைக்காட்சியில் ஒலிக்குப்பதில் படம் இடம் பெறும். மைக்குக்குப் பதில் காமிரா இடம் பெறும். ஒலிபெருக்கிக் குழாய்க்குப் பதில் தொலைக்காட்சிப் பெட்டி அமைந்துள்ளது. ஒளி சமிக்ஞையை 'காமிரா', மின்சார சமிக்ஞையாக மாற்றி விடுகின்றது. அதை மீண்டும் 'ஒளி'ச் சமிக்ஞையாக வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி மாற்றிவிடுகின்றது.

தொலைக்காட்சி நிலையத்தில் உள்ள ஒளி பரப்புக்கோபுரம் ஒளியை மின்காந்த அலையாக மாற்றுகின்றது. வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி மின்காந்த அலையைக் காற்றிலிருந்து வாங்கி ஒளியாக மாற்றுகின்றது. காற்றுச்சூழல் மூலம் செலுத்தப்படும் ஒளி அஞ்சலைத் தொலைக்காட்சி என்கிறோம்.

## தொலைக்காட்சி - குணப் பண்புகள்:

தொலைக்காட்சி எலக்ட்ரானிக் முறையில் இயங்குவதால், உடனுக்குடன் நிலையத்தில் ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளைத் தொலை தூரத்திலும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் மூலம் பார்க்க முடிகிறது.

வீட்டில் உள்ளவரின் மனநிலைப்படி செயல்படும் சேவகனாகத் தொலைக்காட்சி உள்ளது. தொலைக்காட்சி சில சமயங்களில் அதன் உரிமையாளரையே ஏவல் கொள்ளும் தன்மை உடையது. சில நிகழ்ச்சிகள் பார்ப்பவரை மயக்கி விடுகின்றன. தொலைக்காட்சிப் பெட்டிக்கு முட்டாளாக்கும் பெட்டி (Idiot Box) என்றும் பெயர் உண்டு.

தொலைக்காட்சியில் 'வீடியோ' எனப்படுவது இலத்தீன் சொல். அது நான் பார்க்கின்றேன் என்ற பொருளை உடையது. 'ஆடியோ' என்பதும் இலத்தீன் சொல்லே. அது நான் கேட்கிறேன் என்ற பொருளைக் கொண்டது. தொலைக்காட்சியானது, உடனடித் தொடர்பு பெறுவதாலும் நெருங்கிய உறவுத் தன்மை கொள்வதாலும் உண்மையை உணர்த்துவதாலும் ஓர் உயரிய இடத்தைப் பெற்றுள்ளது.

## இந்தியாவில் தொலைக்காட்சி தோன்றி வளர்ந்த வரலாறு:

உலகின் பலநாடுகள் தொலைக்காட்சியின் சிறப்பினை நன்கு அறிந்து அதனைப் பயன்படுத்தத் தொடங்கின. தொலைக்காட்சி பற்றிய பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றங்கள் பெருகின. உலகமக்களுக்குப் பரந்த அறிவைத்தரும் சிறந்த பணியைத் தொலைக்காட்சி செய்து வந்தது. இதனைக் கண்ட இந்திய மக்களும் தொலைக்காட்சியை வரவேற்கத் தொடங்கினர். அகில இந்திய வானொலி நிலையம் 1959ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் புது தில்லியில் ஒரு தொலைக்காட்சி நிலையத்தைத் தொடங்கியது. அறிஞர் 'பெயர்டு' அவர்களால் 1926ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 27ஆம் நாள் இயக்கிக் காட்டப்பட்ட தொலைக்காட்சி 33 ஆண்டுகள் கழித்து இந்திய நாட்டிற்கு அறிமுகமாயிற்று. கல்வித் தொடர்புடைய பணியில் தொலைக்காட்சி முதலில் செயல்பட்டது. முதலில் 5 கிலோவாட் சக்தி கொண்ட ஒளிபரப்பு வசதியுடன் 10 முதல் 12 மைல்வரை தெரியும்படி நிகழ்ச்சிகள் காட்டப்பட்டன. பின் தொலைக்காட்சி மன்றங்கள் (தொலைக்காட்சிக்குழு) ஏற்படுத்தப்பட்டன. அவற்றால் நடுத்தரமக்களும், எளிய மக்களும் நிகழ்ச்சிகளைக் கண்டு பயன் பெற்றனர். சமூகவியல் கல்வி அரைமணி நேரமும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அரைமணி நேரமும் ஆக ஒரு மணிநேர நிகழ்ச்சிகள் வாரத்திற்கு இரண்டு நாட்கள் காட்டப்பட்டன.

தொலைக்காட்சி, மக்களுக்கு நன்முறையில் பயன்படுவதைக் கண்ட அறிஞர்கள் அதன் பயனை விரிவுபடுத்த எண்ணினர். 1961ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் கல்வி ஒளிபரப்புத் தொடங்கப் பரிந்துரை செய்தனர். அதன் அடிப்படையில் இயற்பியல், வேதியியல், ஆங்கிலம், இந்தி முதலான பாடங்கள் தொலைக்காட்சியில் கற்றுத் தரப்பட்டன. நாளடைவில் 1965ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் டெல்லித் தொலைக்காட்சி முழுமையான நிலையமாகச் செயல்படத் தொடங்கியது. வாரத்தில் நான்கு நாட்கள் அரைமணிநேர நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாடகம், திரைப்படச் செய்திகள், பல்சுவை நிகழ்ச்சிகள் எனக் காட்சிகள் பெருகின. 1972 அக்டோபர் 2இல் மும்பையிலும் ஒரு தொலைக்காட்சி நிலையம் தொடங்கப் பெற்றது. அதற்குக் கிளைநிலையம் ஒன்று புனாவிலும் தொடங்கப் பெற்றது.

இவ்வகையில் இந்தியாவின் வடக்கு மேற்குப் பகுதிகள் தொலைக்காட்சி வசதிகளைப் பெற்றன.

1975ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9ஆம் நாள் கல்கத்தாவிலும் சென்னையிலும் தொலைக்காட்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. 1975ஆம் ஆண்டிலேயே நவம்பர் 17ஆம் நாள் லக்னோவிலும் தொலைக்காட்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது.

இந்திய அரசு, தொலைக்காட்சியில் 1976 முதலாகவே வர்த்தக ஒளிபரப்பைத் தொடங்கிவிட்டது. ஆனால் வானொலியில் பல ஆண்டுகட்குப் பின்னரே வர்த்தக ஒலிபரப்பு தொடங்கப்பட்டது. 1976 ஏப்ரல் முதல் தேதியில் இருந்து வானொலியுடன் இணைந்திருந்த தொலைக்காட்சி 'தூர்தர்ஷன்' என்னும் பெயருடன் தனியே பிரிந்தது. தொலைக்காட்சி நிலையங்கள் 'கேந்திரங்கள்' என அழைக்கப்பட்டன. இந்திய அரசு 'வர்கீஸ்' கமிஷனை நியமித்துத் தொலைக்காட்சியின் முன்னேற்றங்கள் குறித்தும், தன்னாட்சி குறித்தும் ஆராயுமாறு கேட்டுக்கொண்டது.

இந்தியாவில் 'சைட்' என்னும் துணைக்கோள் வழியாகத் தொலைக்காட்சி ஒளிபரப்பும் திட்டம் 1975-இல் தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்காவில் 'ஏடிஎஸ்-6' என்ற துணைக்கோளை ஓராண்டுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு தொலைக்காட்சியை இயக்கியது. மக்களுக்குக் கல்வி அறிவு வளரவும், அவர்களிடத்தில் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவும், பிறதுறைகளைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ளவும் அரசாங்கம் இத்திட்டத்தை மேற்கொண்டது. செய்ற்கைக்கோளின் முழுமையான பயனை அடைய முடியவில்லை என அமெரிக்கா அறிவித்திருந்த இந்நிலையில், இந்தியா துணைக்கோளின் வழியாக நல்ல பயனைப் பெறமுடியும் என உலகிற்கு உணர்த்தியது.

## தயாரிப்பு முறை:

தயாரிப்பு முறை என்பது கூட்டுப் பொறுப்பாகும். அரங்க வடிவமைப்பாளர், காமிராக் கலைஞர், ஒப்பனையாளர், அரங்கத்தலைவர், பொறியியல் வல்லுநர், ஒலியமைப்பு இயக்குநர் முதலியோர் அனைவரும் ஒரு நிக்ழ்ச்சியைத் தயாரிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். அவரவர் தங்கள் கோணத்தில் ஆலோசனை தருவார்கள். இவர்களை ஒன்று சேர்த்துத் தயாரிப்பாளர் ஆலோசனை செய்வார். ஒப்பனை, ஒலி அமைப்பு,

ஒளிவிளக்கு, ஆடை அணிகள், விளம்பர அட்டைகள் என அவரவர் தங்கட்குரிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்கள். நிகழ்ச்சிகளில் பங்குபெறும் குழுவினர் ஒவ்வொருவருக்கும் நிகழ்ச்சிக்குரிய பிரதிகள் கொடுக்கப்படும். ஒத்திகைகள் தொடர்ந்து நடைபெறும். நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு செய்யப்படுவதும் உண்டு. நேரடியாக ஒளி பரப்பப்படுவதும் உண்டு. ஒலி அமைப்பும் தொடர்ந்து நடைபெறும். அரங்க மேடையில் கலைஞர்கள் தத்தம் இடப்பகுதியையும் நடமாட்டத்தையும் நன்கு அறிந்து கொள்வார்கள். பின்னர் எங்கெங்கே நடப்பது, எப்படி நிற்பது என்பதற்குரிய பயிற்சிகளெல்லாம் நடைபெறும்.

தயாரிப்பாளர், நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டு அறையில், காட்சிக் கலப்பாளர், பொறியியல் இயக்குனர், ஆகியோருடனும் உதவியாளருடனும் இருந்து நிகழ்ச்சியைத் தயாரிக்கத் தொடங்குவார். நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டு அறையில் ஒலிபெருக்கியும், கடிகாரமும் இருக்கும். அவ்வறையின் முன்பக்கம் ஒளிக்கட்டுப்பாட்டறையும் பின்புறம் ஒலிக்கட்டுப்பாட்டறையும் இருக்கும். இம்மூன்று அறைகளும் நிலைய அரங்கின் மேல் தளத்தில் இருக்கும். ஒலிக் கட்டுப்பாட்டறைக்கும், தயாரிப்புக் கட்டுப்பாட்டறைக்கும் இடையே கண்ணாடியால் தடுக்கப்பட்டு இருக்கும். ஒலிவாங்கி மூலம் வரும் ஒலிகளை ஒருங்கிணைத்து ஒலி வழங்குவார்கள். பதிவு நிகழ்ச்சியாக இருந்தால் நாடாப்பதிவு அறைக்குத் தொடர்பு கொண்டு, எல்லா ஏற்பாடுகளும் தயாரான பிறகு பதிவைத் தொடங்கச் செய்வார்கள்.

## வெளிப்புற ஒளிபரப்புகள்:

வெளியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நிலையத்திற்குக் கொண்டு வந்து ஒளிபரப்புவது வெளிப்புற ஒளிபரப்பாகும். வெளிப்புறப் படபிடிப்புக்கு வெளிப்புற ஒளிபரப்பு வண்டி மிகவும் அடிப்படையாக இருக்கும். மின்சாரத்தின் மூலமும், ஜெனரேட்டர் மூலமும் இதனை இயக்கலாம். இதனைக் குட்டித் தொலைக்காட்சி நிலையம் எனலாம். இவ்வண்டியில் நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும், காமிராவைக் கட்டுப்ப்படுத்தவும், ஒலியைக் கட்டுப்படுத்தவும் மூன்று பிரிவுகள் உள்ளன.

## தொலைகாட்சிக் கலைஞர்கள்:

தொலைக்காட்சிக் கலைஞர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். பார்வையாளர்களுக்குத் தம்

திறமையைக் காட்டிச் சொல்ல எண்ணியதை அவர்கள் முன் சொல்ல வேண்டும். பார்வையாளர்களுக்கு மகிழ்வூட்டல், செய்தி சொல்லல், அறிவுறுத்தல் ஆகிய மூன்றும் தொலைக்காட்சிக் கலைஞர்களின் கடமையாகும். கலைஞர்களை இருபிரிவினராகப் பிரிக்கலாம். நிகழ்ச்சி நடத்துநர், செய்தியளிப்பவர், அறிவிப்பாளர் முதல் பிரிவில் அடங்குவர். இரண்டாம் பிரிவில் நடிகர்கள் அடங்குவர். மேடையில் தோன்றும்போது கலைஞர்கள் ஆயிரக்கணக்கானவர்முன் தங்கள் திறமையைக் காட்டுகின்றனர். தொலைக்காட்சிப் பெட்டியில் காணும் கூட்டம் ஆங்காங்கே சிதறி உள்ளது. குடும்பம் குடும்பமாக இருப்பதால் கலைஞர்கள் அவர்களுடன் நெருக்கமாக உறவு கொள்கிறார்கள். மேடைக் கூச்சலுக்கும் ஆரவாரத்திற்கும் தொலைக்காட்சியில் இடம் இல்லை.

தயாரிப்பாளர் ஏற்பாடு செய்த முறைப்படி செய்தியை வழங்குவார்கள். செய்தி வழங்குவோர் செய்தியை மனத்தில் வாங்கிக் கொண்டு பார்வையாளர் மனத்தில் படும்படி சொல்ல வேண்டும். செய்தியைப் படிப்பது போல் தோன்றாமல் இருக்க டெலிபிராம்டர் என்ற கருவியையும் பயன்படுத்துகின்றனர். செய்தியை வழங்குவோர் செய்தியைத் தயாரிப்பதில்லை. செய்தி ஆசிரியர்கள் உலகச் செய்திகளை ஆங்கிலத்தில் இருந்து தாய் மொழிக்கு மாற்றம் செய்வார்கள்.

தகவலியல் துறையில் தொலைக்காட்சியின் பங்கு செய்தித் துறையின் காரணமாகச் சிறப்புற்று விளங்குகின்றது.

## இந்தியாவில் வானொலி:

இந்திய நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு மக்களின் முழு ஆதரவு வேண்டும். மக்கள் நாட்டு நடப்புப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளும் போதுதான் நாட்டுக்காக மக்கள் ஏதேனும் செய்ய முடியும். மக்களுக்குக் கேள்வி அறிவினை அளிப்பது வானொலியாகும்.

## வரலாறு:

மார்க்கோனி, 1896ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வானொலியைக் கண்டுபிடித்துப் பதிவு செய்தார். இங்கிலாந்தில் முதன்முதலில் தோன்றிய வானொலி பின்னர் உலக நாடுகளுக்குப் பரவத் தொடங்கியது. தோன்றியதில் இருந்து 28 ஆண்டுகள் கழித்து இந்தியாவிற்கு வானொலி வந்தது. 1924 மே திங்கள் 16ஆம் நாள் இந்தியாவில் சென்னை நகரில் முதன்முதலாக வானொலிக்குழு அமைக்கப்பட்டது. அதே ஆண்டு ஜூலை 31இல் சென்னை மாகாண ரேடியோ கிளப் ஒலிபரப்பைத் தொடங்கியது. 1927ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23ஆம் நாள் இர்வின் பிரபு பம்பாயில் வானொலியைத் தொடங்கி வைத்தார். அது 1.5 கிலோவாட் ஆற்றலுள்ள அமைப்பு முறையில் தொடங்கி வைக்கப்பட்டதாகும். அதே ஆண்டில் 40 நாள்களுக்குப் பின் கல்கத்தாவில் 1.5 கிலோ வாட் ஆற்றலுள்ள மற்றொரு வானொலி நிலையம் வங்காள ஆளுநர் சர் ஸ்டான்லி ஜாக்சன் என்பவரால் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டு அக்டோபரில் மதராஸ் மாகாண ரேடியோகிளப் கலைக்கப்பட்டது. 1930 ஏப்ரல் முதல் நாள் சென்னை நகராட்சிக் கழகம் முறையான ஒலிபரப்பைத் தொடங்கியது.

## பணத்தட்டுப்பாடு:

இந்திய வானொலி தொடங்கப்பட்ட நிலையில் பணத்தட்டுப்பாடு காரணமாகப் பல இடையூறுகள் ஏற்பட்டன. இந்திய வானொலி ஒலி பரப்பு நிறுவனத்தார் பணப்பற்றாக்குறையினால் இந்திய அரசிடம் பண உதவி கேட்டனர். இந்திய அரசு உதவமுடியாத நிலையில் இருப்பதாக அறிவித்தது. அதனால் இந்தியன் ரேடியோ டெலிகிராப் கம்பெனி 3.5 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுத்து உதவியது. இந்நிலையில்

வானொலிப் பெட்டி தயாரிக்கும் கம்பெனிகள் தம்முடைய முதலீட்டுக்கு இழப்பு வரும் எனக்கருதி அரசிடம் முறையிட்டன. நாடெங்கும் வானொலிக்கு ஆதரவாக முறையீடுகள் பிறந்தன. அதன்பின்னர் 1930 ஏப்ரல் மாதம் முதல் நாளில் இருந்து தொழிலாளர் துறையின் கீழ் அரசாங்கமே வானொலியை ஏற்றுக் கொண்டது. இந்தியன் பிராட்காஸ்டிங் சர்வீஸ் என்ற அமைப்பை அரசு உருவாக்கியது.

## அரசு பொறுப்பேற்று நடத்தல்:

1931 ஆம் ஆண்டு நவம்பர் 23இல் இருந்து ஒலிபரப்புத் துறையைத் தற்காலிகமாக அரசே ஏற்று நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. 1934ஆம் ஆண்டு முதல் ஒலிபரப்பின் ஆவல் வளர்ச்சி பெற்றது. அந்த ஆண்டிலேயே மதராஸ் அரசு பி.பி.சி நிறுவனத்தில் இருந்து 'பாலோ' என்ற ஒலிபரப்பு வல்லுநரை அழைத்து அவரிடம் வானொலி வளர்ச்சிக்கென ஒரு திட்டத்தைக் கேட்டது. அன்று முதல் வானொலியில் ஒலிபரப்பு நன்கு வளர்ச்சி பெற்றது. 1935 ஜனவரியில் இந்திய அரசு மார்க்கோனி நிறுவனத்திடம் இருந்து டெல்லி நிலையத்திற்கு ஒலிபரப்புக் கருவிகளை வாங்கத் திட்டமிட்டது. 1935 ஆகஸ்ட் திங்கள் லயனல் பில்டன் என்பவர் முதல் ஒலிபரப்புக் கட்டுப்பாட்டாளராக இந்தியா வந்தார். மேலும் பி.பி.சியின் ஆராய்ச்சித்துறைத் தலைவராக இருந்த எச்.எல்.கிர்கே என்பவரும் இந்தியா வந்து சேர்ந்தார்.

'கிர்கே' வந்தபின் 7 புதிய மத்திய அலைவரிசை நிலையங்களைத் தொடங்கவும், ஒரு சிற்றலை ஒலிபரப்பை அமைக்கவும் பரிந்துரை செய்தார். பி.பி.சி.யில் இருந்து சி.டபுள்யு கார்டர் என்பவர் இங்கு வந்து 1936 ஆகஸ்டில் தலைமைப் பொறியாளராகப் பொறுப்பேற்றார். இந்திய கம்பியில்லாத தந்திச்சட்டமும் அமுலுக்கு வந்தது.

## இந்திய வானொலி வளர்ச்சி:

1935ஆம் ஆண்டிலிருந்து இந்திய வானொலி நல்ல வளர்ச்சியைப் பெற்றது. அந்த ஆண்டு செப்டம்பர் 10இல் மைசூரில் ஆகாசவாணி நிலையம் ஏற்பட்டது. 1936இல் டில்லி நிலையம் ஒலிபரப்பை இயக்கிற்று. 1938இல் சென்னையில் ஆளுநர் எர்ஸ்கின் பிரபு வானொலி நிலையத்தைத் தொடங்கி

வைத்தார். 1939இல் திருச்சி வானொலி நிலையத்தையும் அவரே தொடங்கி வைத்தார். இந்தியா விடுதலை பெற்றபின் 1951வரை கூட வானொலி அவ்வளவாக வளர்ச்சி பெறவில்லை. விடுதலை பெற்ற பிறகு இந்தியாவில் 6 வானொலி நிலையங்களே இருந்தன. ஆறில் இரண்டு தமிழ்நாட்டில் இருந்தது. அவை சென்னை, திருச்சி ஆகிய இடங்கள். மற்றவை புதுடில்லி, பம்பாய், கல்கத்தா, லக்னோ ஆகிய நகரங்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வானொலிக்கு முக்கிய இடம் தரப்பட்டது. 16 ஒலிபரப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டன.

7ஆம் ஐந்தாண்டுத் திட்டமுடிவில் 205 வானொலி நிலையங்கள் இந்தியாவில் நிறுவப்பட்டதாக மத்திய அரசு அறிவித்தது. 97.5 சதவிகித மக்கள் வானொலியின் பயனை அடைந்தனர்.

## வானொலியின் நோக்கமும் தனித்தன்மைகளும்:

மக்களுக்குத் தகவல் அளிக்கும் பொறுப்பைத் தனது தலையாய பணியாக வானொலி ஏற்றுக் கொண்டுள்ளது. கற்பித்தல், தகவல் அளித்தல், மகிழ்ச்சியூட்டல் ஆகிய மூன்றும் வானொலியின் நோக்கங்களாக உள்ளன.

வானொலி காதுக்குரிய கருவி. ஒலியின் வாயிலாகவே கேட்பவர்களின் சிந்தனையைத் தூண்டி எழுச்சியைத் தருகின்றது. வேலையைச் செய்து கொண்டே தகவல்களைக் கேட்கலாம். வானொலி, கேட்போரை விரைந்து சென்று சேரும் ஆற்றலுடையது. சூட்டோடு சூடாக எச்செய்தியினையும் வானொலி நிருபர் வானொலி வழியாக நமக்கு அறிவிக்க வாய்ப்புண்டு. வானொலிப் பெட்டி இன்று ஏழை, எளியவர் மத்தியிலும் மலிவாகக் கிடைக்கும் கருவியாக உள்ளது. 'டிரான்சிஸ்டர்' யுகமாக இன்று உள்ளது. எளிதில் எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய கருவியாகவும் வானொலி உள்ளது. இவ்வகையில் இந்தியாவில் வானொலி படிப்படியாக வளர்ந்து சிறந்த நோக்கங்களையும் தனித்தன்மைகளையும் கொண்டு விளங்குகின்றது.

## இசைநிகழ்ச்சியும் பேச்சு மொழி நிகழ்ச்சியும்:

இசை நிகழ்ச்சிகள்தாம் வானொலியில் அதிகமான ஒலிபரப்பு செய்யப்படுகின்றன. கர்நாடக இசை; இந்துஸ்தானி

இசை, நாட்டுப்புற இசை, மேற்கத்திய இசை, திரை இசை எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இசைக் கலைஞர்கள், பாடல் ஆசிரியர்கள், பாடகர்கள், இளம் கலைஞர்கள், இசை அமைப்பாளர்கள் என ஆயிரக்கணக்கானோர் இந்நிகழ்ச்சிகளினால் பயன்பெறுகின்றனர். பேச்சுமொழி நிகழ்ச்சி வானொலியில் இரண்டாவது முக்கியவத்தும் பெறுகின்றது. பேருரைகள், சிற்றுரைகள், உரையாடல்கள், விவாதங்கள், நாடகங்கள், சொற்சித்திரங்கள் ஆகியன பேச்சு மொழி நிகழ்ச்சியில் அடங்கும். மொழிஅறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடக ஆசிரியர்கள் ஆகியோர் தங்கள் திறமைகளை இந்நிகழ்ச்சிகள் வாயிலாக வெளிப்படுத்துகின்றனர்.

## குழுவினர்க்கான நிகழ்ச்சி:

குழந்தைகள், இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியோருக்குத் தனித்தனி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவையன்றி விளையாட்டு நிகழ்ச்சிகள், கவியரங்குகள், இலக்கிய நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், அறிவியல் நிகழ்ச்சிகள், முதலியனவும் நடைபெறுகின்றன. திறமையை வெளிப்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும். குழந்தைகள் மனத்தில் ஊக்கம், நேர்மை, இரக்கம் முதலான குணங்கள் வளரவேண்டும் எனக் குழந்தைகள் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.

பெண்கள் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் அவர்களுக்குத் தேவையான குடும்பக்கலை, குழந்தை வளர்ப்பு, தாய்சேய் நலம், வீட்டு நிர்வாகம், குடும்ப வரவு செலவு முதலான செய்திகள் ஒலிபரப்பாகின்றன. மக்கள் நல்ல உடல்வளம் பெறவும், மனநலம் பெறவும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. குடும்பநெறி சிறப்பாக அறிவுறுத்தப்படுகின்றது.

இளைஞர்களுக்கு முக்கியமான வேலைவாய்ப்புச் செய்திகள், ஒலிபரப்பாகின்றன. கலைத்திறத்தினை வெளிப்படுத்தும் இசை, நாடகம், முதலிய நுண்கலைகளில் இளைஞர்களுக்கு உள்ள ஈடுபாட்டை இளைஞர்கள் நிகழ்ச்சி பயன்படுத்துகின்றது. தொழிற்சாலைகளில் மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள், தொழிலாளர் நலச் சட்டங்கள், அவர்களின் பொழுதுபோக்குக்கு உதவும் நிகழ்ச்சிகள் ஆகியன அக்குழுவினருக்குரிய நிகழ்ச்சிகளில் சிறப்பிடம் பெறுகின்றது.

இந்தியநாடு விவசாய நாடு, வானொலியில் விவசாய நிகழ்ச்சிகள் முக்கியமானவை. வேளாண்மை உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெறவேண்டும் என்பதே இவ்வொலி பரப்பின் நோக்கம். வானொலி அறிமுகப்படுத்திய நெல், வானொலி நெல் என அழைக்கப்பட்டது. பண்ணை ஒலிபரப்பில் முற்போக்கான வேளாண்மை உத்திகள் எடுத்துக் கூறப்படுகின்றன. வேளாண்மைப் பல்கலைக்கழகங்களும், விவசாயத்துறைகளும் தத்தம் கருத்துகளை வலியுறுத்திக் கூறுகின்றன.

விளையாட்டு நிகழ்ச்சிகள் உலக அளவில் மக்கள் மனத்தைக் கவரக்கூடியன. கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் ஆகியவை மக்களுக்கு இலக்கிய ஈடுபாட்டினை ஏற்படுத்துவதோடு பரந்த அறிவையும் தருகின்றன. வானொலியில் நடைபெறும் கல்வி நிகழ்ச்சிகளில் கற்பித்தலில் புதிய உத்திகள் பாடம் நடத்தும் முறை ஆகியன விளக்கப்படுகின்றன.

## வானொலிக் கோட்பாடுகள்:

இந்திய வானொலி, தனக்கென்று சில கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளது. நட்பு நாடுகளைக் குறைகூறக் கூடாது. குறிப்பிட்ட ஓர் இனத்தையோ இனத்தைச் சார்ந்தவரையோ குறைகூறக்கூடாது. வன்முறையைத் தூண்டும் வகையில் ஒலிபரப்பு செய்யக்கூடாது. நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலும், குடியரசுத் தலைவரின் செயல்முறைகளுக்கு எதிரான வகையிலும் ஒலிபரப்பு செய்யக்கூடாது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளையுமாறும், தனிப்பட்ட ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டுப் புகழுமாறும் ஒலிபரப்புச் செய்யக்கூடாது. தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் உறுப்பினரோ, தொடர்புடையவரோ வானொலியில் பங்கேற்கக் கூடாது. சமுதாயத்தில் யாருடைய மனத்தையும் புண்படுத்தக்கூடாது என்பதால் குருடர், செவிடர் எனக் கூறாமல் பார்வை அற்றோர், கேட்க இயலாதவர் என்ற சொற்களை உபயோகிக்க வேண்டும்.

## பயன்கள்:

வானொலியால் விளையும் பயன்களை ஆராய்ந்து வருகின்றனர். அதற்காகத் தனிப்பிரிவும் (நேயர் ஆய்வுப்பிரிவு - Audience Research Unit) உள்ளது. உடல்நலம், கிராம வளர்ச்சி, சிறு குடும்ப நெறி, மகளிர் நலம் போன்ற செய்திகளுக்கு

வானொலி முக்கியத்துவம் கொடுத்து ஒலி பரப்புவதினால் பல நன்மைகள் விளைந்துள்ளன. வானொலி, நாட்டு ஒருமைப்பாட்டையும் வளர்க்கின்றது. ஒரு மொழிக்குரிய கலைகளையும், இலக்கியங்களையும் பிறமொழிக்காரர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் அகில பாரத நிகழ்ச்சியாக வானொலி நடத்துகிறது. தேசிய அலைவரிசை என்ற ஒன்றனை ஏற்படுத்தி அதற்கெனத் தனி நிகழ்ச்சிகளை வானொலி ஒலிபரப்புகிறது. வானொலியை ஒலிக்களஞ்சியம் எனலாம். 'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்' என்று வள்ளுவர் கூறிய கருத்தினை வானொலி உறுதிப்படுத்துகின்றது.